

தமிழ்நாடு அரசின் சார்பில், மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 147வது பிறந்தநாளை முன்னிட்டு, நேற்று (10.12.2025) சென்னை பாரிமுனை உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம் காமராஜர் நகரில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முகாம் இல்லத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் நேரில் சந்தித்து திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே பேட்டை,பாலாபுரம் கிராம ஊராட்சி தமிழ்நாடுதேசிய அளவில் சிறந்த கிராம ஊராட்சி 3 வது இடத்திற்கு பெற்ற விருதினை காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ்.சந்திரன், இணை இயக்குநர் வை.ஜெயகுமார், செயற்பொறியாளர் ராஜவேல்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

### பேரிடர் கால நிவாரண நிதி! கடந்த 10 ஆண்டுகளாக

# தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசு!

## நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம்!

புதுடெல்லி, டிச. 11 -

தமிழ்நாட்டுக்கு கடந்த 10 ஆண்டுகளில் 24 ஆயிரத்து 679 கோடி ரூபாய் அளவுக்கு பேரிடர் கால நிவாரண நிதி கோரப்பட்ட நிலையில், ஒன்றிய அரசோ வெறும் 4 ஆயிரத்து 136 கோடி ரூபாய் நிதியை மட்டுமே வழங்கியுள்ளது.

மழை, வெள்ளம், புயல், வறட்சி உள்ளிட்டவற்றால் பாதிக்கப்படும் ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒன்றிய குழுக்கள் அனுப்பப்பட்டு பாதிப்புகள் ஆய்வு செய்யப்படுவதுடன், அக்குழு அளிக்கும் பரிந்துரையின்பேரில் ஒன்றிய அரசு பேரிடர் கால நிவாரண நிதியை அறிவித்து வழங்கும். அதேநேரத்தில் மாநில அரசும் பாதிப்புகள் மற்றும் சேதத்தை கணக்கிட்டு உரியத்தொகையை வழங்க வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்தும். இந்நிலையில், கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டை எண்ணற்ற புயல்கள் தாக்கியதால் ஏற்பட்ட மழை, வெள்ளம் உள்ளிட்டவற்றால் மனித உயிர்சேதம், பொருட்சேதம், கால்நடைகள் உயிர் சேதம், பயிர்கள் சேதம் உள்ளிட்ட கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன. இந்நிலையில், பெரும் இழப்பு மற்றும் சேதங்கள் உள்ளிட்ட பாதிப்புகளுக்காக மாநில அரசு சார்பில் 24 ஆயிரத்து 679 கோடியே 77 லட்சம் ரூபாய் பேரிடர் கால நிவாரண நிதி வழங்க வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

நிவர், வர்தா, ஒக்கி, மிச்சாங் உள்ளிட்ட புயல்களால் பெய்த பெருமழை மற்றும் வரலாறு காணாத வெள்ளத்தால் பலத்த சேதம் மற்றும் பாதிப்புகள் ஏற்பட்டதால், சீரமைப்பு பணிகளுக்கும், மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் பேரிடர் கால நிவாரண நிதியை விரைந்து ஒதுக்கீடு செய்து விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனால், பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க., அரசோ மிக சொற்ப நிதியை மட்டுமே அறிவித்து இதுவரை வழங்கியுள்ளது. அந்தவகையில், கடந்த 10 ஆண்டுகளில் 24 ஆயிரத்து 679 கோடியே 77 லட்சம் ரூபாய் பேரிடர் கால நிவாரண நிதி கோரப்பட்டநிலையில், ஒன்றிய அரசோ வெறும் 4 ஆயிரத்து 136 கோடி ரூபாய் நிதியை மட்டுமே வழங்கியுள்ளது.

இது கோரப்பட்ட நிதியில் வெறும் 17 சதவிகிதம் மட்டுமே ஆகும். இதனால் ஒவ்வொரு ஆண்டும் மாநில அரசு தனது சொந்த நிதியை பயன்படுத்தி மழை சேதங்களை சீர் செய்து வருவதுடன், விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு உரிய நிவாரணமும் வழங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### பெரம்பூர் எஸ்.அருள் தலைமை! க.ஜெயராமன் முன்னிலை!

# பெரம்பூர் 44‘அ’ வட்டத்தில் துணை முதல்வர் பிறந்தநாள் பொதுக்கூட்டம்!

## தமிழ் க.அமுதரசன் – ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. நல உதவிகள் வழங்கி சிறப்புரை!

சென்னை, டிச.11-

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்குப் பகுதி, 44(அ) வட்ட தி.மு.க. சார்பில் மாநில இளைஞர் அணி செயலாளரும் - தமிழ்நாட்டின் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (11.12.2025) மாலை 6.00 மணிக்கு பெரிய பாளையத்தம்மன் ஆலயம் அருகில் அழகிரிசாமி தெரு - வ.உ.சி தெரு சந்திப்பில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு வட்டக் கழகப் பொறுப்பாளர் பெரம்பூர் எஸ்.அருள் தலைமை வகிக்கிறார்.

க.ஜெயராமன், இரா.நரேந்திரன், வி.தயாளன், சர்வஜெயாதாஸ், நா.சேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்ட கழக நிர்வாகிகள் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் தமிழ் க. அமுதரசன், சென்னை வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்துக்கொள்ளுமாறு வட்டப் பொறுப்பாளர் பெரம்பூர் எஸ்.அருள் கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. – கு.ஏழுமலை பங்கேற்பு!

# 132 ‘அ’ வட்டம் சார்பில் ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ கூட்டம்!

## வட்டக் கழகச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா வேண்டுகோள்!

சென்னை, டிச.11-

தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, தியாகராய நகர் மேற்கு பகுதி கழக செயலாளர் கே. ஏழுமலை. எம்.சி. ஆகியோர் வேண்டுகோளுக்கிணங்க வட்டத்தில் உள்ள 15 பாகங்களிலும் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி எனும் தலைப்பில் பாக உறுப்பினர்கள் மற்றும் பாகத்தில் பாக முகவர்கள்(BLC), பாக உறுப்பினர்கள் (BLC), பாக தகவல் தொழில்நுட்பப் பிரிவு (BDA), உறுப்பினர்கள், பாக இளைஞரணி உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதி கழக, வட்டக்கழக, பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர்கள் இணைந்து என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி செயல்திட்ட கூட்டங்களை மாலை மணி அளவில் 11.12.2025 முதல் 25.12.2025 வரை அந்த பாகத்தில் உள்ள தெருக்களில் கூட்டங்களை நடத்தி மக்களை சந்திக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இன்று (11.12.2025, வியாழக்கிழமை) மாலை 7 மணி அளவில் பாகம் 138-ல் அனுசியா தெரு, சேர்கான் தோட்டம் சந்திப்பில் வட்டக் கழக செயலாளர் கே. எஸ்.வெல்டிங்ராஜா தலைமையில், பாக ஒருங்கிணைப்பாளர்கள் முன்னிலையில் முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, பகுதி செயலாளர் கே.ஏழுமலை. எம்.சி., தொகுதி பார்வையாளர் திருமதி ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., திருமதி பா. கார்த்திகாபாஸ்கர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

எனவே இந்த பாகம் 138-க்கு உட்பட்ட மேல் சொன்ன அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி வட்டச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா கேட்டுக் கொண்டுள்ளார்.

### இடைக்கழி நாடு பேரூரில்

# கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் நல உதவிகள்!

## மாணவர்களுக்கு வி.எம்.திராவிட திவாகரன் வழங்கினார்!

காஞ்சிபுரம், டிச.11-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் கா.சுந்தர், காஞ்சி தெற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் நாத்திகம் நாகராசன் ஆலோசனைப்படி சித்தாமூர் கிழக்கு ஒன்றியம் இடைக்கழி நாடு பேரூர் கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் வி.எம்.திராவிட திவாகரன் தலைமையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை ஒட்டி மாணவ - மாணவிகளுக்கு நோட்டு, பேனா, பென்சில் உள்ளிட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மேலும் மாணவ - மாணவிகளுக்கு கலை இலக்கியத்தின் சார்பில் இலக்கியப் போட்டிகள் நடத்தப்பட்டன.

### விடுபட்ட மகளிருக்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் முதலமைச்சருக்கு நன்றி!

# மாதவரம் வடக்குப் பகுதி தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

## பகுதிச் செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலை!

சென்னை, டிச.11-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் நடந்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் விடுபட்ட மகளிர் அனைவருக்கும் டிசம்பர் 12ஆம் தேதி ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் 19வது வட்டம் மாத்தூர் எம் எம் டி ஏ இரண்டாவது பிரதான சாலையில் உள்ள ராகவேந்திரா திருமண மண்டபத்தில் பகுதி அவை தலைவர் வி. திராவிட வீரன் தலைமையில் நடைபெற்றது.

19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் வரவேற்றார்.

மாதவரம் வடக்கு பகுதி வட்டச் செயலாளர்கள் கே. அங்குசாமி, இ. கண்ணப்பன், கே. கருணாகரன்,பி.எஸ். சந்துரு, வி. ஆர். குப்பன், பகுதி கழக நிர்வாகிகள் க. காசிநாதன், ஆ. ராஜேந்திரன், பி நிர்மல் குமார், பா.சந்திரன், கே. ராஜா, வி.கார்த்திகேயன், கே. செல்வன், பி.தரணி, மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சி.எஸ். எஸ். டி.சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.

பின்வரும் தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

1) திருவண்ணாமலையில் வரும் 14ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்புரையாற்றும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் திமுக வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் பெருந்திரளாக மாதவரம் வடக்கு பகுதியில் இருந்து இளைஞர் அணி கலந்து கொள்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

2) என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்பதன் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி பாகங்கள் தோறும் கூட்டங்கள் நடத்தி துண்டு பிரசுரங்கள் வழங்கி தெருமுனை கூட்டங்கள் நடத்துவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

3) விடுபட்ட மகளிர் தகுதியான அனைவருக்கும் வரும் டிசம்பர் 12ஆம் தேதி ஆயிரம் ரூபாய் வழங்க உத்தரவிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவருக்கு மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் நன்றி தெரிவித்தும் கையொலி எழுப்பியும் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது

இக்கூட்டத்தில் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் எம் அமுதா, எஸ். உதயகுமார், எஸ். கோபாலகிருஷ்ணன், கே.சண்முக பிரியன், எஸ். சிவ குமார், துரை தசரதன், பி. துரைசாமி, வசிம் முகமது.

இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் ர. விஜய் ஆனந்த், மாதவரம் தெற்கு பகுதி வினோத், எம். என், அஜய் தென்னவன், ஜி. ராஜேஷ் கண்ணன், எலந்தனூர் வி. சிவ பிரகாஷ், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், க.யுவராஜ், ஏ.விஜயன், சாந்த குமார், பகுதி மகளிர் அணி நிர்வாகிகள் எஸ். சுகாசினி, அத்திகுளம் ஏ.தேவி, ஆர். ஜெயபாரதி, ராஜேஸ்வரி, ஆர். சரஸ்வதி, சகிலா, பெரியநாயகி, கஸ்தூரி, சாந்தி, பார்கவி

பாக ஒருங்கிணைப்பாளர்கள் வக்கீல் டில்லி பாபு, வக்கீல் சுரேந்தர், .ரா குகன், டி. பார்ப்பன், வழக்கறிஞர்கள் இ. வெங்கடேசன், எம். என், தளபதி மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், இளைஞர் அணியினர் என பலர் திரளாக கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.ஆர்.எஸ். ராஜாக்கனி

**டிசம்பர் 11 (2009)**



**முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து விருதுநகர் நகரக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**விருதுநகர் கூட்டுறவு வங்கித் தலைவராகப் பணியாற்றியவர்.**

**1986ல் மொழிப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று ஏறத்தாழ இருபத்தோரு முறை சிறை சென்றவர்.**

**“சிறைக்கும், சித்திரவதைக்கும் அஞ்சாத என் தம்பி ராஜாக்கனி” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.

# தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப மாநில துணைச் செயலாளராக திரு.**எம்.ராஜராஜன்** (218, சேலம் மெயின் ரோடு, குமாரபாளையம் நாமக்கல் மாவட்டம் ) அவர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநில நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை, – 600 018.
நாள் : 10.12.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காவனூர் மா.தாமோதரன்

**டிசம்பர் 11 (2015)**



**பேரறிஞர் அண்ணாவின் பேச்சால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கிளைச் செயலாளர், சித்தாமூர் ஒன்றியச் செயலாளர், மாவட்ட அணிகளின் அமைப்பாளராகப் பணியாற்றியவர்.**

**சூணாம்பேடு ஊராட்சி மன்றத் தலைவராக இரண்டு முறையும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் அன்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த இந்தி எதிர்ப்பு, சட்ட நகல் எரிப்பு, விலைவாசி உயர்வு, இலங்கைத் தமிழர் ஆதரவு உள்ளிட்ட பல போராட்டங்களில் பங்கேற்று ஏறத்தாழ பத்து முறை சிறை சென்றவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.